**MCOP NO. 160/2016**
**Dated:04.06.2025**

**PW1 :** சத்யபிரியா

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

சம்பவத்தன்று டிஎன் 19 எப் 46 47 என்ற வாகனத்தில் என் கணவர் ஓட்ட நாங்கள் அனைவரும் அமர்ந்து கொண்டு சென்றோம் என்றால் சரிதான். என் கணவரோடு சேர்த்து அந்த காரில் ஆறு பேர் குழந்தைகளுடன் சேர்த்து பயணம் செய்தோம். நாங்கள் சென்ற வாகனத்திற்கு முன்பாக டிஎன் 01 எக்ஸ் 73 74 என்ற லாரியானது சென்றது என்றால் சரிதான். அந்த லாரியின் பின்பக்கத்தில் கார் மோதியதாக தான் வழக்கில் காட்டப்பட்டுள்ளது. நாங்கள் சென்ற வாகனத்திற்கும் லாரிக்கும் இடையே போதிய இடைவெளி இருந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் லாரியை இடது பக்கத்தில் திடீரென்று திருப்பி விட்டார். என் கணவர் கவனத்துடன் பாதுகாப்பான வேகத்தில் பாதுகாப்பு இடைவெளி விட்டு வாகனத்தை இயக்கி இருந்தால் விபத்தை தடுத்து இருக்கலாம் என்றாலும் சரி அல்ல. நான் சம்பவ காலத்தில் உதவி பேராசிரியராக பணி புரிந்தேன். மனுதாரர் தரப்பு சான்றாவனம் ஒன்பதில் காட்டப்பட்டுள்ள சம்பளத் தொகையானது எனது வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும் என்றால் சரிதான். அதனை நிரூபிக்க வங்கி கணக்கு புத்தகத்தை என் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.மனுதாரர் தரப்பு சான்றாவனம் 9 இந்த வழக்கிற்காக எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் கணவரை ஓட்டுனர் உரிமத்தை என் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் சம்பவ காலத்தில் இல்லை என்பதால் தான் அதனை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முறையான ஓட்டுனர் பயிற்சி பெறாமல் ஓட்டுநர் உரிமம் பெறாமல் கவனக்குறைவுடன் வாகனத்தை ஓட்டி விபத்தை வரவழைத்துக் கொண்டார் என்றால் சரியல்ல. என் கணவர் ஓட்டிச் சென்ற காரின் வாகன சேதாரத்தை காட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்தானது என் கணவரது கவனக்குறைவாலும் அவருக்கு ஓட்டுனர் உரிமம் எதுவும் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதாலும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. லாரி ஓட்டுனரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இரண்டாம்

எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்ய தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.